26 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்புஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

அலர் 7 EELA NADU இதழ் 132

National Tamil Daily தேசிய தினசரி

(23-6-65)

விசுவாவசு ஆனி 9 வைர் பிறை 22 புதன்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

# அல்ஜீயர்ஸ் செல்வதா அல்லது இல்லையா?

## தனியார் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்குமா?

### செனட்டில் எழுப்பப்படவிருக்கும் கேள்வி

பம்பலப்பிட்டி, செவ்வாய் தேசிய கல்வித்திட்டக்கொள்கையை அமுலாக்குமுகமாக தனியார் பாடசாலைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படுமா என நீதி அமைச்சரிடம் செனட்டர் ஏ. தலைநாயக்கா நாளை செனட்சபை கூடும்போது கேட்பார்.

பின்வரும் கேள்விகளையும் செனிட்டர் தலைநாயக்கா நீதி அமைச்சரிடம் கேட்பார்:—

கல்வி இலாகாவின் அனுமதி பெற்ற பதிவுசெய்த தனியார் பாடசாலைகளில் இதுகாறும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படாதவை எத்தனை?

இப்பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் பெயர் யாது? அவ்வவற்றின் இடாப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைகள் யாவை?

மாணவரில் பெரும்பான்மையோர் மதத்தைப் பாடசாலையுன் மதமாகக் கொண்டால் இப்பாடசாலையின் மதங்கள் எவை?

இப்பாடசாலைகள் எப்பொழுது அரசாங்கத்திடம் கையளிக்கப்பெறும்? கையளிப்பதில்லையென்றால், காரணம்?

அரசாங்கத்தின் இன்றைய அரசமொழிக் கொள்கை "சிங்களம் மட்டும்" என்பதை அமைச்சர் அறிவாரா?

அவ்வாறுயின், தமிழ் மொழியைப் பொறுத்தவரையில், தேசிய அரசாங்கம், "நியாயமான அளவு தமிழ் உபயோக"த்தை மட்டுமே தனது கொள்கையாக ஏற்றுக்கொள்கிறதா?

யாழ்ப்பாணத்தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளரா?

அவ்வாறுறுன், யாழ்ப்பாணத்தொகுதி உறுப்பினரின் கட்சியான தமிழ்க் காங்கிரஸின் "ஐம்பதுக்கைம்பது" கோரிக்கையை தற்சமயத்திலோ அல்லது வருங்காலத்திலோ தேசிய அரசாங்கம் வழங்காதென அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் அறிக்கை விடுவாரா?

இல்லையெனில் ஏன்?

கதிர்காமப் புனிதப் பிரதேச எல்லைக்குள் முஸ்லிம் சமூகத்தினரால் போற்றப்படுவனவும் புனிதமாகக் கொள்ளப்படுவனவுமான புராதனச்சமாதியொன்றும் பள்ளிவாசலொன்றும் உள்ளனவென்பதை அமைச்சர் அறிவாரா? அவர் சமீபத்தில் நியமித்த கதிர்காமப் புனிதப்பிரதேசத்துக்கான ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு முஸ்லிம் ஒருவரை நியமிக்க அவர் தவறியுள்ளாரென்பதையும் அவர் அறிவாரா? எனவும்

இவ்வாறு முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படாமை குறித்து முஸ்லிம் சமூகத்தினர் மிகவும் மனச்சோர்வடைந்துள்ளதனால் கதிர்காம ஆலோசனைக்குழுவில் அங்கம்வகிப்பதற்கு முஸ்லிம் ஒருவரை இக்கட்டத்திலாவது நியமிப்பது பற்றி அமைச்சர் ஆலோசிப்பாரா? இல்லையெனில், ஏன்? எனவும் செனட்டர் ஏ.ஆர்.எம். ஹமீம் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பார்.

கல்வி இலாகா ஆயிரத்து இருநூறு ஆங்கில உதவிஆசிரியர்களை தெரிவு செய்வதற்கு தற்சமயம் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துகிறதா?

அதனை உடனடுத்து மூவாயிரம் சிங்கள ஆசிரியரைத் தெரிவு செய்வதெனத் தீர்மானித்துள்ளதா?

தேவையான அளவு முஸ்லிம் ஆசிரியரைத் தெரிவு செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இவ்விலாகா இதுவரை தவறியதேன்?

மேற்படி நடவடிக்கைகளை எப்போது எடுப்பதென அது உத்தேசித்துள்ளது?

இத்தகைய உத்தேசம் கொண்டிருக்க வில்லையானல், யாது காரணம்? எனவும் அவர் நீதிஅமைச்சரிடம் கேட்பார்.

---

## 'மீண்டும் பிரதமராவேன்'

கேகாலை, செவ்வாய்

கூட்டரசாங்கத்திற்கு ஆதரவு அளித்த ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் அதே சமயம் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளித்த ஆசிரியர்கள், அவர்கள் விரும்பிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள் என்று கேகாலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா கூறினர்.

தேசிய அரசாங்கம் விரைவில் வீழ்ச்சியடையுமென்றும் இரண்டு வருடமுடிவில்தான் மீண்டும்பிரதமராக வருவேனென்றும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினர்.

## இறக்குமதி செய்ய அனுமதி

கொழும்பு செவ்வாய்

ரூபா 20லட்சம்பெறுமதியான மீனை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குவதென நேற்று நடைபெற்ற விசேஷ [illegible] மந்திரிகளின் உபகமிட்டி தீர்மானித்துள்ளது.

## ஆசிய, ஆபிரிக்க பிரதமர்கள் இறுதியாக ஆலோசனை

### பல நாடுகளின் நிச்சயமற்ற நிலைமை

லண்டன் ஜூன் 22

லண்டன் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிற்காக கூடியிருக்கும் ஆசிய ஆபிரிக்க பிரதம மந்திரிகள், அல்ஜியர்ஸ் மகாநாட்டில் கலந்துகொள்ள அங்கு செல்வதா இல்லையா என்னும் பிரச்னைபற்றி இன்று இறுதியாக விவாதித்தார்கள்.

இதற்கிடையில் பல நாடுகளின் தூதுகோஷ்டிகள் அல்ஜியர்ஸ் புறப்பட்டிருக்கின்றன. அதே சமயம் பல நாடுகளின் தூதுகோஷ்டிகள் பயணத்தை ஒத்திவைத்திருக்கின்றன.

அல்ஜியர்ஸ் புரட்சி அரசாங்கம் லண்டனுக்கும், மற்றும் பல ஆபிரிக்க நாடுகளுக்கும் பல தூது கோஷ்டிகளை அனுப்பியிருக்கிறது.

மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்த நாடுகளை அழைக்குமுகமாகவே இந்த தூது கோஷ்டிகள் அனுப்பபட்டிருக்கின்றன.

அல்ஜீயர்விலும், இதர அல்ஜிரிய நகரங்களிலும் பென் பெல்லாவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து நகரின் மத்திய பகுதிக்கு துருப்புக்கள் அழைக்கப்பட்டன. மெஷின் துப்பாக்கிகளுடன் அவர்கள் ரோந்து சுற்றிவருகிறார்கள். ஐரோப்பிய நாடுகளுக்கும், ஐக்கிய ஆராபியக் குடியரசுக்குமிலையான டெலிபோன் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

அல்ஜீரியாவில் சகல கூட்டங்களுக்கும் தற்போது தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

---

## பதவி உயர்வு கிடையாது

கொழும்பு, செவ்வாய்

கடந்த பொதுத் தேர்தலில் தீவிரமாக பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காது.

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள 42 அரசியல் ஆசிரியர்களுக்கு எதிராகசுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிராகரிக்கப்பட்டால் மேற் [illegible] என்று [illegible] டாரங்களிடமிருந்து தெரிய வருகிறது.

## சாரதி லைசென்ஸ் கோரி விண்ணப்பங்கள் குவிகின்றன

### ஊழியர் பற்றுக்குறையால் லைசென்ஸ் வழங்குவதில் தாமதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்து இலாகாவில் ஊழியர் பற்றுக்குறை நிலவுவதாகவும், இதனுல் சாரதி லைசென்ஸ் பெறுவதற்கு விண்ணப்பங்கள் பெருமளவில் குவிந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. இந்தக் காரியாலயத்தில் ஒரு லிகிதர் மட்டுமே கடமையாற்றி வருகிறார் எனவும், மேலதிக லிகிதர்களை அனுப்புமாறு தலைமைக் காரியாலயத்திடம் கோரப்பட்டிருந்த போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள ஒருவர் மோட்டார் சாரதி லைசென்ஸ் பெற விண்ணப்பித்து 11 மாதங்களுக்குப் பின்னரே அவரின் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படமுடிகிறது. நாள் ஒன்றுக்கு பத்து விண்ணப்பங்களுக்கு குறையாமல் காரியாலயத்துக்கு வந்து சேர்வதாகவும் ஆனல் ஒருலிகிதரும் ஒரு மோட்டார் வாகன பரிசோதகரும் மட்டுமே இங்கு கடமையாற்றுவதாலேயே நாளுக்கு நாள் விண்ணப்பங்கள் அதிகரித்து வருகிறது. இக்காரியாலயத்தில் இப்பொழுது 200 வர்த்தக வாகனங்களுக்கான லைசென்ஸ் விண்ணப்பங்களும், தனிப்பட்ட கார் லைசென்ஸ் பெற 100 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. இவற்றை பரிசீலனைசெய்து விண்ணப்பதாரரை பரிசீலனை செய்து விண்ணப்பதாரரை பரீட்சைக்கு அழைப்பதற்கு குறைந்தது மேலும் ஒரு லிகிதராவது தேவையெனவும் சொல்லப்படுகிறது.

அடுத்தவாரம் தொடக்கம் சாரதிகளுக்கு லைசென்ஸ் வழங்கவென நடத்தப்படும் பரீட்சையின்போது மோட்டார் வாகனத்தில் பரிசோதகரோடு பொதுமக்கள் சார்பில் ஒருவர் கலந்துகொள்வார். லஞ்சத்தையும், மோசடியையும் தவிர்ப்பதற்காகவே இப்புது முறை கையாளப்பட்டிருக்கிறது.

---

## யாழ். நகரில் சுகாதார வாரம்

யாழ்ப்பாணம், புதன்

சுகாதாரவாரக் கொண்டாட்டம் யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் 26ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் பாடசாலைகளின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெறும்,

சுகாதாரவாரக் கொண்டாட்டத்தின் இன்றைய நிகழ்ச்சி வண்ணார்பண்ணை பிரசவவிடுதியில் திரு. ரி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெறும். நாளை அரியாலை பிரசவ விடுதியில் மாநகரசபை முதல்வர் திரு. சு. செ. மகாதேவா தலைமையிலும், வெள்ளிக்கிழமை குருநகர் பிரசவவிடுதியில் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தலைமையிலும் நடைபெறும்

நேற்று முன்தினம் நெடுங்குளம் பிரசவ விடுதியில் திரு. த. கந்தையா தலைமையிலும், நேற்று மாலை கச்சமோட்டை பிரசவ விடுதியில் திரு. அ. தி. துரையப்பா தலைமையிலும்

---

## இந்தோனேஷிய சொத்துக்கள்

கோலாலம்பூர், ஜூன் 22

சிங்கப்பூரிலுள்ள இந்தோனேஷிய தூதராலயத்தையும், மலேசியாவிலுள்ள இதர இந்தோனேஷிய சொத்துக்களையும் மலேசிய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி வாக்கு

விஞ்ஞானிகள் தங்கள் புதிய ஆராய்ச்சிப் படைப்புகளால் உலகை ஒன்றுபடுத்துகின்றார்கள். அரசியல்வாதிகளோ தங்கள் விருப்பு வெறுப்புகளால் உலகை கூறுபடுத்துகிறார்கள்.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 9 உ (23-6-65)

## சுகாதாரவாரம்

இலங்கையிலே வருடாவருடம் நடைபெற்றுவரும் சுகாதாரவாரத்தின் முக்கிய நோக்கம், வியாதிகள் வராமல் தடுத்து, மக்கள் நோயற்ற வாழ்வு வாழவேண்டுமென்பது தான். சில வருடங்களுக்கு முன் இலங்கையில் மலேரியா காய்ச்சல் பரவி, பல உயிர்களைக் கொள்ளை கொண்டன. ஆனால் தக்க சுகாதார நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக நாட்டில் அந்தக் காய்ச்சல் அநேகமாக இல்லாமல் போய்விட்டது.

எனினும் ஒரு நோய் மறைந்தால் புதிது புதிதாக பல நோய்கள் வருகின்றன. நவநாகரிகத்தின் பயனாக வியாதிகள் பெருகி, ஆஸ்பத்திரிகளில் நெருக்கடி அதிகரிக்கின்றதே ஒழிய குறையும்வழியில்லை. வருடாவருடம் சுகாதார வாரங்கள் நடைபெறுகின்றன. கூட்டங்கள், பிரசாரங்கள், கண்காட்சிகள் எல்லாம் ஒழுங்கு செய்யப்படுகின்றன. எனினும் முடிவில் கண்டபலன் நோய்களும், நோயாளரும் பெருகுவது தான். இதுகுறித்து யாரும் பெருமையோ மகிழ்ச்சியோ கொள்ள முடியாது. இதற்கு மாறாக நோய்கள் வருவதற்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து அவற்றை நீக்க பொதுமக்களும் சுகாதார அதிகாரிகளும் அதிகம் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாண்டிலே இலங்கை சுகாதாரவாரத்தில் சிறப்பாக வலியுறுத்தப்படுவது, வாய் சுத்தமும், பல் சுத்தமுமாகும். குழந்தைகளும் பள்ளிமாணவ மாணவிகளும் சுகாதாரமற்ற ஐஸ்பழம், இனிப்பு முதலியவற்றை அதிகமாகச் சாப்பிடுவதால் பல்சொத்தை ஏற்படுகிறதென்றும் அதைப் பெற்றோர்கள் விசேஷமாகக் கவனித்து தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தங்கள் குழந்தைகளின் மேலான நன்மையைக் கருதி பெற்றோர்கள் இவ்விஷயத்தில் அதிக கண்டிப்பாக இருந்து ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

வருடத்துக்கு ஒரு வாரத்தில் ஒரு நோயைப்பற்றி சுகாதார பிரசாரம் செய்வதால் மட்டும் விரும்பத்தக்க பலன் ஏற்பட முடியாது. பள்ளிக்கூடப்பாடப் புத்தகங்களிலேயே கட்டாயமாக சுகாதாரத்தைப்பற்றி இரண்டொரு பாடங்களைச் சேர்க்க முடியாதா? சுகாதாரம் இஷ்டபாடமாகப் பள்ளிகளில் போதிக்கப்படுகின்றது. அதை எல்லாருக்கும் கட்டாயமாக்கினால் சுகாதார பாடத்துக்கு அதிக முக்கியம் ஏற்படுவதுடன் மாணவர்கள் தங்கள் சுகாதாரத்தைக் காத்துக் கொள்ளவும் அது அதிக பயன்படுவதாகவுமிருக்கும்.

பொதுவாக நோய்கள் வருவதற்கு அடிப்படைக்காரணம் அறியாமை ஒருபுறமிருக்க, ஏழ்மைதான் என்பது பகிரங்க ரகசியம். சத்து உணவு இல்லாமல், மாணவ மாணவிகளில் பலர் இளைத்து, பல நோய்களுக்கும் சுலபமாக உள்ளாகின்றனர். இலவச மதிய போசனமுறை நல்லதேயென்றாலும், ஏழ்மையின் கொடுமையை இதனால் வெளுவாகத் தீர்க்கமுடியவில்லை. பலவீடுகளில் இரவில் சாப்பாடின்றி பலர் பட்டினியாகப் படுப்பது பகிரங்க ரகசியம். அவர்கள் இதைப்பற்றி வெளியில் கூறுவதில்லை. கூப்பன் அரிசியும் வாங்க வழியின்றி, குழந்தைகளுடன் ஒரு தகப்பன் விஷமருந்தி தற்கொலை செய்துகொண்ட கண்ணளவியான செய்தியைப் படித்தோம். தர்மபுரம் முதலிய இடங்களில் பட்டினிக்கொடுமையால், மக்கள் பரதவித்து, பலநோய்களுக்கும் ஆளாகின்றார்கள். எல்லா நோய்களையும் விடக்கொடியது வறுமைநோய்தான். இந்த சமூக நோயை அரசாங்கம் எவ்வளவுதூரம் தீர்க்கமுடிகிறதோ, அவ்வளவுக்கு, மற்ற நோய்கள் வராமல் தடுக்கவும் மக்கள் அதிக சுதந்திரத்துடன் வாழவும் வழிசெய்யமுடியும்.

## புரட்சிதான் வழியாம்!

உடுப்பிட்டி, செவ்

"தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குச் சமாதான பேர்வழிகளை நம்பியிருக்க முடியாது. புரட்சிகர இயக்கங்களின் மூலமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். உலக வரலாற்றிலும் எந்த விடயத்திலும் புரட்சிகர இயக்கங்கள் தான் மிகக் குறுகிய காலத்தில் வெற்றிபெற்றுள்ளன. கடந்த தேர்தலின் போது தமக்கு எதிராக நடந்துகொண்ட ஆசிரியர்களைப் பழிவாக்க இந்த அரசாங்கம் முயல்கிறது. உண்மை நிலையை ஆராய்ந்தால் இன்று பிற்போக்குவாதிகளுக்கு ஆதரவாக வெளிப்படையாக வேலை செய்து தமது மாணவர்களையும் தூண்டி அரசியல் கூட்டங்களில் கொடிபிடிக்கவும் கைதட்டவும் ஏவிவிட்ட ஆசிரியர்களின் பட்டியல் அனேகம். இருந்தாலும் ஆசிரியர்களுக்கு அரசியல் சுதந்திரம் வழங்க வேண்டியது அவசியமாகும். அரசியல் சுதந்திரம் இல்லாமல் எவரும் வாழ முடியாது.

இவ்வாறு துன்னாலை தெற்கு கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கக் கூட்டத்தில் தலைமைவகித்த திரு. ந. கணேசன் பேசுகையில் கூறினர்.

## படக்காட்சி

உடுப்பிட்டி, செவ்வாய்

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சார்பில் கரவெட்டி அர்ச். அந்தோனியார் ஆலய முன்றலில் இலவசக் கூட்டுறவுப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது. பிரிட்டனில் கூட்டுறவுப் பண்ணை, கூட்டுறவு இயந்திரத் தொழிற்சாலை முதலியனவும் மகாராணியின் இந்திய விஜயமும் காண்பிக்கப்பட்டன.

## யாழ் மேயரின் சுகாதாரவிழா செய்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஆண்டிற்கு ஒருதடவை சுகாதாரத்திற்கு விழா எடுப்பதால் நம்வாழ்வு ஆரோக்கிய வாழ்வாக மலர்ந்துவிடாது. நாட்டில் சுகாதாரக் கல்வி மேலும் மேலும் வளர்க்கப்பட வேண்டும். இதுவிஷயத்தில் சென்னை மாநகர முதல்வர் திரு. சிட்டிபாபு தெரிவித்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, இந்திய ஒலிபரப்பு அமைச்சர் திருமதி இந்திராகாந்தி, ஒலிபரப்பு நேரத்தில், மாதத்திற்கு அரை மணிநேரத்தை சுகாதார நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கியிருப்பதாக ஒருசெய்தி கூறுகின்றது. இம்முன்மாதிரியை எமதுவானொலி அமைச்சரும் கவனத்திற்குஎடுத்து, இங்கும் சுகாதார நிகழ்ச்சிக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது விரும்பத்தக்கதாகும்'

யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் திரு. எஸ். சி. மகாதேவா, வெளியிட்ட சுகாதார வார செய்தியில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—சுகாதார கல்விக்கான விசேஷ ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை செனக்கியப் பகுதியைச்சேர்ந்தசுகாதார போதகர்களே தயாரித்து அளிக்க வேண்டும்.

## இருகமிட்டிகள் முடிவு செய்யும்

கொழும்பு, செவ்

தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு அல்லதுகட்டாய லீவில் சென்ற இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர்களின் எதிர்காலம்பற்றி இரு கமிட்டிகள் தீர்மானிக்கும்.

இராணுவ உத்தியோகத்தர்கள்பற்றி பாதுகாப்பு அமைச்சு கமிட்டியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்பற்றி பொதுச் சேவைக்கமிஷனும் முடிவு செய்யும்.

## பெயர்மாற்றகோரிக்கை

பருத்தித்துறை, செவ்

அல்வாய் தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பெயரை அதன் ஸ்தாபகரான புலவர் சின்னத்தம்பியை நினைவுகூரும்முகமாக சின்னத்தம்பிப்புலவர் பாடசாலையென மாற்றி உதவும்படி பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வித் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளது.

தலைமை ஆசிரியர் திரு. கே. சி. சதாசிவம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## காலி இடங்களை நிரப்பவும்

கொழும்பு, செவ்

இரண்டு வருடத்திற்கு முன் காலியானபுகையிரதநிலைய அதிபர்களின் இடங்களை உடனடியாக நிரப்புமாறு போக்குவரத்துமந்திரி திரு. ஏ. எல். பி. குறள்ள புகையிரதப் பகுதி ஜெனரல் மனேச்சர் திரு. எம். டி. ரம்பாலவிடம் தெரிவித்துள்ளார்.

இவ்விஷயமாக புகையிரத அதிபர்கள்யூனியன்மந்திரியைப் பேட்டிகண்டது.

## இளைஞர் முன்னேற்றமே சமூக முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செவ்

பத்தைமேனி விநாயகர் சனசமூக நிலையத்தில் இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் நிர்வாகசபைக்கூட்டம் திரு. சுப்பிரமணியசர்மா தலைமையில் நடைபெற்றது.

இளைஞரின் முன்னேற்றமே சமூகத்தின்முன்னேற்றத்திற்கு ஆணிவேராகவிளங்குகிறதென [illegible] ஏடுத்துக்காட்டு என்றும் தலைவர் பேசும்போது கூறினர்.

## சுகாதாரத்தை கட்டாய பாடமாக்க வேண்டும்

சாவகச்சேரி, செவ்வாய்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை பொதுமக்களுக்கு விளக்கிக் கூறும் வகையில், சுகாதாரத்தின் அவசியம் பற்றிவானொலிமூலம் விளக்குவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யமுன்வரவேண்டும். அத்துடன் சுகாதாரத்தை எல்லாப் பாடசாலைகளிலும், கட்டாய பாடமாக போதிப்பதற்கும் அரசாங்கம் கவனம்எடுக்க வேண்டும்' என்று கைதடியில்நடைபெற்ற சுகாதார விழாவில் கைதடி நாவற்குழி கிராமசபைத்தலைவர் திரு க. தம்பிப்பிள்ளை பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு மருத்துவக் கலாநிதி திருமதி அருளம்பலம் தலைமை வகித்தார். தென்மராட்சிக்காரியாதிகாரிஉட்பட வேறு பலரும் சொற்பொழிவாற்றினர்கள்.

## வள்ளுவர் விழா

குரும்பசிட்டி, செவ்வாய்

குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர்சங்க சார்பில் திருவள்ளுவர் நினைவுதினவிழா சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தமிழ்விரிவுரையாளர் பண்டிதர் வ. நடராசன் தலைமையில் கொண்டாடப்பட்டது. கிராமமுன்னேற்றச்சங்கதிறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் அம்பிகைபாகன், திருமதி வரதராஜன், திரு. சி. கனகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## கால்நடை நோய்

யாழ்ப்பாணம், செவ்

அல்லைப்பிட்டி உள்ளூராட்சி மன்றத்தின் பகுதிகளாகிய மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய ஊர்களில் கால்நடைகள் நோயினால் மரணமாகின்றன.

சென்ற இரண்டு மூன்று நாட்களாக மிருகவைத்தியப் பகுதியார் நோயைக் கட்டுப்படுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துவருகின்றனர். தீவுப்பகுதிக் காரியாதிகாரி ஏற்றகாலத்தில் நடவடிக்கை எடுத்தபடியால் நோய் தீவிரமாகப் பரவாது தடுக்கப்பட்டுவருகிறது.

## நாட்டிலும் நகரிலும்

ஆங்கிலேய ஆட்சி நடந்த போது, ஆங்கிலமொழி தனியாட்சி நடத்தியபோது கல்லூரிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் 'டமில் மார்க்கிங் மொனிட்டர்' ஒருவர் இருந்தார். அவருடைய வேலை என்னவென்றால் வகுப்பு நேரங்களில் மாணவர்களில் யார்யார் எத்தனை தடவை தமிழில் பேசினர்கள் என்று குறிப்புவைத்துக்கொள்வது! அடுத்தநாள் காலையில் அவர் சேகரித்த புள்ளிவிபரங்கள் வகுப்புவாத்தியாரிடம் ஒப்படைக்கப்படும், ஒவ்வொரு முறை தமிழிற் பேசியதற்கும் ஐஞ்சுசதம் குற்றம் என்று வாத்தியார் தண்டனை விதிப்பார்; வகுப்பு நேரமல்லாத மற்றைய நேரங்களில் கல்லூரியிலும் வீட்டிலும் நமதுசெல்வத் தாய்மொழியில் பேசிக் கொட்டியவாய் வகுப்பு நேரத்திலும் தமிழில்பேச எத்தனித்தால் நாமென்னசெய்வது? சிலர்தினமும் 50, 60 சதம் குற்றம் கட்டவும் நேரிடும்.

இன்று காலமெல்லாம் எப்படி மாறிப்போய்விட்டது! இனிமேல் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போதனமொழி தமிழ் அல்லது சிங்களமாய் இருக்கவேண்டுமாம். ஆங்கிலமல்ல, இன்னும் சிறிது காலம் போக, 'ஆங்கிலம் மார்க்கிங் மொனிட்டர்'கள் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படவும் கூடுமல்லவா? அந்தோ, ஆங்கிலமே, உனக்கு இந்தக் கதியா வரவேண்டும்!

உலகில் ஜனத்தொகைகூடிய நாடு சீனு. ஆதையினுல் சீனமொழியே ஆகக்கூடிய ஜனங்களால் பேசப்படும் மொழி. ஐக்கியநாட்டு ஸ்தாபனம் போன்ற சர்வதேச சபைகளில் கருமமொழியாயிருப்பது பிரெஞ்சு மொழி. ஆயினும் 'உலக மொழி' என்று கருதும் அளவுக்கு வலிமைபெற்று எல்லா நாடுகளிலும் செல்லுபடியாகும் மொழி ஒன்று உண்டானால் அது ஆங்கிலம்தான் என்று நிச்சயமாகக்கூறலாம். உலகத்தின் வியாபார'கொடுக்கல்வாங்கல்'கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடத்தப்படுகின்றன. ஆங்கிலம் தெரிந்தஒருவர் உலகில் நாகரிகமடைந்த பகுதிகள் எல்லாவற்றிற்கும்தைரியமாகப் போய்வரலாம். ஷேக்ஸ்பியர், டிக்கின்ஸ், ஷெல்லி, மில்டன் போன்ற உலகம்போற்றும் இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் படைப்புகளை ஆங்கிலத்திலேயேசமைத்திருக்கின்ருர்கள்.

இப்பேர்ப்பட்ட உபயோகமான மொழியை, சுயமொழிப் பற்று மிகுதியினுல். ஒதுக்கித்தள்ள நினைப்பது அவ்வளவு யுக்தியானதல்ல. எவ்வளவு தான் முயன்றாலும் சிங்களமோ தமிழோ ஆங்கிலத்தின் இடத்தை நிரப்ப முடியாது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றவாறு ஆங்கிலப் படிப்பினுல் நாமடைந்த நன்மையை நமதுபிற்கால சந்ததிகளும் பெற வழி அமைக்க வேண்டும்.

ரஷ்யா விட்ட முதலாவது ஸ்புட்னிக் என்று சந்திரன் மீது போய் விழுந்ததோ அன்றே நமது உபகிரகத்துக்கு ஆபத்து தொடங்கி விட்டது. ஒன்றன்பின்னென்றாக ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் அம்புலி மீது ஜெக்கட்டுகளை ஏவிக் கொண்டேயிருக்கிறார்கள். இவ்வளவும் போதாதென்று சந்திரனில் வைரக்கற்கள் நிறைந்திருக்கின்றன என்று ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி கூறிவிட்டார். இனி போட்டா போட்டி மெலும் விறு விறுப்படையப் போகிறது.

சந்திரனில் வாயுமண்டலம் இல்லாதபடியினுல் வானவெளியில் உலவித்திரியும் 'மீட்டியோறைட்' என்ற வலதுகள் அதை நிமிடத்துக்கு நிமிடம் பலமாகத் தாக்கி வருகின்றன என்றும், இத

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ல் சந்திரனிலுள்ள கனி வைரமாக மாறுமென்றும் அந்த விஞ்ஞானி சென்ற வாரம் வெளியிட்ட தகவல் அமெரிக்கரையும் ரஷ்யரையும் இன்னும் பிறரையும் சும்மா விட்டு வைக்க மாட்டாது. முதலில் சந்திரனை அடைகிறவர்களுக்குத்தான் அந்த வைரப் புதையல் அகப்படப் போகிறதல்லவா!

கிழக்கத்தைய நாடுகளில் வீசிய கறுவாப்பட்டை முதலியவற்றின் மணம் தான் ஒருவர் பின்னொருவராக போர்த்துக்கீசரையும் ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் இங்கு இழுத்துக் கொண்டு வந்தது. கோட்டைகள் தகர்ந்தன, ராஜ்யங்கள் மறைந்தன, கப்பல்கள் ஆழ்ந்தன, மனிதர்கள் மாண்டனர்.

இதுபோலத்தான் இன்று நடக்கும் போட்டியும் முடியுமோ என்று பயமாயிருக்கிறது, சந்திரனின் வைரக் குவியல்களை அள்ளிக் கொண்டு வரப் புறப்படும் அமெரிக்க, ரஷ்ய வானவெளிக் கப்பல்கள் ஒன்றோடொன்று பொருதி, பதினெட்டாம் போர் நடந்தது போல், எச் குண்டுகளையும் என் குண்டுகளையும் அஸ்திரப் பிரயோகம் செய்து, தங்களையும் அழித்து. மேலே சந்திரனையும் கீழே பூமியையும் எரித்துச் சுட்டு... அம்ம [illegible] வேண்டாம் இந்த [illegible]த எண்ணம்!

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மகாநாட்டை ஒத்திவையுங்கள்; பெல்லாவின் உயிரை காப்பாற்றுங்கள்"

## அல்ஜீரிய புரட்சித் தலைவர்களுக்கு ஆசிய, ஆபிரிக்க தலைவர்கள் தந்தி

### திட்டமிட்டபடி மகாநாட்டை நடத்த புரட்சி அரசாங்கம் முயற்சி

லண்டன், ஜூன் 22

ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டை ஒத்திவைக்கும்படி லண்டனில் கூடியுள்ள ஆசிய ஆபிரிக்கத் தலைவர்கள் அல்ஜீரிய புரட்சித் தலைவர் கானல் பொமீதியனுக்குத் தந்தி ஒன்றை அனுப்பியிருக்கின்றனர். காவலில் வைக்கப்பட்டிருக்கும் பென்பெல்லாவின் உயிரை மனிதாபிமானத்தை முன்னிட்டு காப்பாற்றும்படியும் அவர்கள் இத்தந்தியில் கோரியிருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கைக்கு துணிச்சலான முதல் முயற்சியை இந்தியப் பிரதமர் சாஸ்திரி எடுத்துக்கொண்டார் என அறிவிக்கப்படுகிறது. கானு அதிபர் நிக்ருமா, தன்ஸானியா அதிபர் நயர்ரரே, உகண்டா பிரதமர் ஒபடே ஆகிய மூவரையும் திரு. சாஸ்திரி ஒன்றாக அழைத்து இவ்விஷயம்பற்றி பேசியதாயும், 35 நிமிடம் நடைபெற்ற அவர்களின் இரகசியக்கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

**தூதர்கள் வந்தனர்**

இதற்கிடையில் அல்ஜீரிய புரட்சி அரசாங்கம் அனுப்பிய இரு தூதர்கள் நேற்று லண்டன் வந்தனர். வந்தவுடன் அவர்கள் ஆசிய-ஆபிரிக்கத் தலைவர்களுடன் பேச்சுநடத்த ஆரம்பித்தனர் என்றும், இத்தலைவர்களை திட்டமிட்டபடி அல்ஜீயர்ஸ் மகாநாட்டுக்கு வரும்படிசெய்ய அவர்கள் முழு முயற்சியில் ஈடுபட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

லைபீரியா, மகாநாட்டை ஒத்திப்போடவேண்டும் எனக் கேட்டிருக்கிறது.

நாளை அல்ஜீயர்ஸ் புறப்படவிருந்த இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங், தாம் அல்ஜீயர்ஸ் போகவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டால் தமது பயணத்தை ஒத்திவைக்கப்போவதாய் அறிவித்தார். சைப்ரஸ், ஜப்பான் ஆகிய நாடுகள் மகாநாட்டை ஒத்திவைக்கும்படி கோரியிருக்கின்றன. ஜோர்டான், துருக்கி தாய்லந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, லாவோஸ், சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்கின்றன.

திட்டமிட்டபடி மகாநாடு நடக்கும் எனத்தாம் நம்புவதாய் ஐக்கிய அரபியக் குடியரசுத்தலைவர் நாஸர் கூறியிருக்கிறார்.

மகாநாடு நடக்கவேண்டும் என பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோவும் கூறியிருக்கிறார்.

**பிரிட்டன் இன்றும் அங்கீகரிக்கவில்லை**

இதற்கிடையில் அல்ஜீரியாவின் புதிய அரசாங்கத்தை அங்கீகரிப்பதுபற்றி பிரிட்டன் இன்னும் ஆலோசித்துவருவதாயும், ஏற்கனவே அங்கீகரித்ததாக வெளியான செய்தி தவறு என்றும் அறிவிக்கப்பட்டது.

அல்ஜீரியா நிலைமை பற்றி மேலும் தகவல்கிடைக்கும் வரை புதிய அரசாங்கத்தை அங்கீகரிப்பதில்லை என கனடா தீர்மானித்திருக்கிறது.

**பெல்லா ஆதரவுக்கு 35 பேர் பலி**

இதே சமயம் கொன்ஸ்டன்டைன், பென் ஆகிய அல்ஜீரிய நகரங்களில் முன்னாள் ஜனாதிபதி பென்பெல்லாவை ஆதரித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாயும், துருப்புக்கள் சுட்டதில் 35 பேர் மாண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. பெல்லா ஆதரவாளர்கள் 200 பேர் கைது செய்யப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது. மொராக்கோவிலுள்ள அல்ஜீரிய மாணவர்களும் நேற்று பெல்லாவை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## சூ-நாஸர் பேச்சுவார்த்தை

கெய்ரோ, ஜூன் 22

சீன பிரதமர் சூ என்லாய் ஜனாதிபதி நாஸருடன் நேற்று 2மணி நேரம் பேச்சு நடத்தினார்.

## சாலையை துண்டிக்க பாக். முயற்சி

புதுடில்லி, ஜூன். 22

ஸ்ரீநகர்—லே சாலையைத் துண்டிக்க பாகிஸ்தானியர் முயற்சித்து வருவதாய், ஐ.நா. பார்வையாளரை அங்கு அனுப்பும்படி இந்தியா கேட்டிருக்கிறது.

கடந்த 6 தினங்களில் பாகிஸ்தானியர் காஷ்மீரில் 40 தடவை அத்துமீறினர் என்றும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் விரட்டியடிக்கப் பட்டதாயும், 7 பேர் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## 2ம் டெஸ்ட்

லார்ட்ஸ், ஜூன் 22

இங்கிலாந்து — நியூசிலந்து 2ம் டெஸ்ட் 4ம் நாள் ஸ்கோர் விபரம்,

**நியூஸிலந்து**

முதல் இன்னிங்ஸில் 347 ரன்கள் இரண்டாம் இன்னிங்ஸில் 175 ரன்கள்.

**இங்கிலாந்து**

முதல் இன்னிங்ஸில் 307 ரன்கள் 2ம் இன். 1 விக்கட்டுக்கு 64 ரன்கள்.

## ஐ. நா. வுக்கு பாக்: புகார்

நியூயோர்க், ஜூன் 22

காஷ்மீர் எல்லையிலும், இதர பாகிஸ்தான் எல்லையிலும் இந்தியா தனது இராணுவபலத்தை மிகவும் அதிகரித்திருப்பதால் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு பாகிஸ்தான் பிரதிநிதி புகார் தெரிவித் திருக்கிறார்.

## எவரெஸ்ட் கோஷ்டி


புதுடில்லி, ஜூன் 22

எவரெஸ்டை வெற்றி கொண்டபாரத மலையேறும் கோஷ்டி நாளை காட்மாண்டிலிருந்து டில்லி வந்து சேரும். உப ஜனாதிபதி, டில்லி நகரசபை ஆகியவற்றின் வரவேற்பில் அவர்கள் கலந்து கொள்வார்கள்.

## 20 ஆண்டுகளில் 5 இலட்சம் கார்

ஸ்டட்கார்ட் (டாட்) ஜூன் 22

மேற்கு ஜெர்மனிலுள்ள டெய்ம்லர்-பென்ஸ் என்ற மோட்டார் கம்பெனி 20 ஆண்டுகளில் 5 லட்சம் கார்களைத் தயார் செய்து உலகிலேயே மகத்தான சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது, இக்கம்பெனியில் 5,00,000-ஆவது கார் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது. இங்கு தயாரான கார்களை வரிசையாக நிறுத்தினால் அவற்றின் மொத்த நீளம் 22 88 [illegible]



அமெரிக்க ராணுவத்தில் இடம்பெற்றுள்ள "எக்ஸ், வி. 142 ஏ" என்ற போக்குவரத்து விமானங்களை இங்கே காணலாம். ஹெலிகாப்டரைப் போல் இவை திடீரென வானத்தில் கிளம்பி, வேகத்தை அதிகரிக்கும்போது இறக்கைகள் முன்னால் வருகின்றன.

## சமாதானக் கோஷ்டியை சீன வரவேற்காது

### தலைமைப் பொறுப்பை வில்சன் கைவிடுவார்?

பீகிங், ஜூன் 22

வியட்நாம் சம்பந்தமான காமன்வெல்த் சமாதானக் கோஷ்டி சீனாவில் வரவேற்கப்படமாட்டாது என "பீப்பிள்ஸ் டெய்லி" பத்திரிகை நேற்று அறிவித்தது.

அமெரிக்காவின் ஏவலாளராகச் செயல்பட பிரிட்டன் முயற்சிப்பதாயும் காமன்வெல்த்தின் அடையாளச்சீட்டு இருந்தால் தூதுகோஷ்டியை வரவேற்க சீனா மறுக்காது என அது தப்பாகக் கருதியதாயும் பத்திரிகை மேலும் கூறியது.

ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் அமெரிக்கா மீதான கண்டனத்தைத் தவிர்க்கும் பொருட்டு வில்சன் துரிதமாகச் செயலில் இறங்க முயன்றதாயும் மேலும் அது கூறியது.

இதற்கிடையில் நேற்றுபிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. ஸ்டுவர்ட் விடுத்த அறிக்கை ஒன்றில் சமாதான தூது கோஷ்டிபற்றி சீனா, வடவியட்நாம் ஆகிய நாடுகளிடம் பிரிட்டன் பதில் கேட்டிருக்கிறதென்றும் தூதுகோஷ்டியின் தலைமைப் பதவியிலிருந்து விலக பிரதமர் வில்சன் தயாராய் இருப்பதாயும் கூறினார்.

நேற்று 60 அமெரிக்க தென்வியட்நாம் ஜெட்விமானங்கள் வடவியட்நாம்மீது பலத்ததாக்குதல் நடத்தியதாகவும் வியட்காங் இலக்குகள்மீது கெபாலம் குண்டுகளை 20 விமானங்கள் வீசித் தாக்கியதாயும்அறிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 8 அமெரிக்க விமானங்களை வடவியட்நாம் சுட்டுவீழ்த்தியதாக ஹானோய் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

## ரொடீஷியா பற்றி காமன்வெல்த் பிரதமர்கள் முழுநாள் விவாதம்

லண்டன், ஜூன், 22

காமன்வெல்த் பிரதமமந்திரிகள் நேற்று முழுதும் ரொடீஷியா பற்றி விவாதித்தனர்

திரு. சாஸ்திரி பேசுகையில் அங்கு பெரும்பான்மை ஆட்சியை வலியுறுத்தியதுடன், இந்தியா தனது ராஜதந்திர தூதராலயத்தை மூடிவிட்டதன் மூலம் அங்குள்ள அரசியல் நிலைமைக்கு எதிர்ப்புக்காட்டி இருக்கிறதென்று தெரிவித்தார். ஒரு தரப்பு சுதந்திரப் பிரகடனத்தை திரு. வில்சன் நிராகரித்திருப்பதையும் அவர் பாராட்டினார்.

ரொடீஷியா பற்றி உடன் அரசியல் திட்ட மகாநாடு கூட்டப்படவேண்டும் என்றும், வயதுவந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல் நடத்தியபின் அதற்குச் சுதந்திரம் வழங்கவேண்டும் என்றும் டாக்டர் நிக்ருமா, டாக்டர் கவுண்டா, டாக்டர் பண்டா ஆகிய ஆபிரிக்கத் தலைவர்கள் வற்புறுத்தினர்.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு தனது இறுதி அறிக்கையை வரையும் பொருட்டு ஒரு கமிட்டியை நியமித்தது. காமன்வெல்த் ஸ்தாபன தலைமைக் காரியதரிசி பதவி பற்றி ஆராய மற்றோர் கமிட்டி நியமிக்கப்பட்டது.

நேற்று காமன்வெல்த் பிரதமர்கள், பக்கிங்ஹாம் அரண்மனையில் மகாராணி அளித்த வரவேற்பில் கலந்துகொண்டனர்.

## நாடக அரங்கு

பான் (டாட) ஜூன் 22

ஐரோப்பாவிலேயே மிகவும் நவீனமான நாடக அரங்கம் மேற்கு ஜெர்மன் தலைநகரான பானில் சமீபத்தில் திறக்கப்பட்டது. இந்த அரங்கில் "ஆரஸ்டியா" என்ற நாடகம்முதல் முதலாக அரசாங்கத்தலைவர்கள், நகரப் பிரமுகர்கள் முன்னிலையில் நடந்தது. அரங்கின் அமைப்பை அனைவரும் ஒருமுகமாகப்பாராட்டினார்கள். இதில் 875 பேர் இருக்கலாம். மேடைக்கான ஒளி அமைப்பு, மின்காந்த (எலக்டிரானிக்ஸ்) முறையில் தானே இயங்கும் வகையில் அமைந்திருக்கிறது, ஸ்டட்கார்ட் நகரைச் சேர்ந்த கிளாஸ் ஜெஸ்லெர், வில்பிரட பெக்ளர்லிங் ஆகிய இருவரும் வடிவமைத்து இந்த அரங்கை உருவாக்கி இருக்கிறார்கள்,



வியட்காங் கொரில்லாக்களுக்கு எதிராகச் சண்டையிடும் தென்வியட்நாம் அரசாங்கத் துருப்புகளுக்கு அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள் ஆயுதப்பயிற்சி வழங்குகிறார்கள். 273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

புலவர் திரு கந்தமுருகேச னூர் இயற்கை யெய்திவிட்டார், என்ற செய்தி இடிபோற்கேட்கின்றதே இது உண்மையா?

அந்தப் பகுத்தறிவுச்செம்மல் பாருக்குத் தமிழ் இறைத்த பெருமநு இனி இல்லை என்கிருர்களே இது உண்மையா? அந்த வெண்தாடி முகத்தை புன்னகை தவழும் உதட்டை பேரொளி பூத்த வதனத்தை இனிக் காண முடியாது, அச்சம் அறியாத அந்தப் புலோலியின் பெரும் புலவனை இனி நாம் பார்த்திட இயலாது எனப் பலர் பதைப்புறுகிருர்களே இவர்கள் கூறுவதில் உள்ளது உண்மைதானு?

ஐய, நீ மறைந்துவிட்டாயா? பண்டிதர்களும் பாவலர்களும் பலர்வந்து தமிழ் கேட்பார்களே அவர்கள் அனைவர்க்கும் நீ அள்ளி அள்ளி அருள்வாயே அந்தத் தெள்ளு தமிழ்ப் பேராறுய் நீ நின்றது ஐய, இனி இல்லையா? நீ மறைந்துவிட்டாய் உன்னைக் காணவோ அமுது தமிழையும் அரும்மணிக் கருத்தையும் கொண்மொழுகியோடும் உன் உரை தனைக் கேட்கவோ இனி இடம் இல்லைத்தான். எம் நெஞ்சத்தில் ஒளியேற்றும் உன் கூரியபார்வை உணர்வை நெகிழவைக்கும் உன் உள்ளத்தின் பரிவு சுவையல்ல சுவையேதான் கல்வி என்பதை இயம்பவைக்கும் உன் உயரிய நகைச்சுவை வார்த்தை, துயர் பல நடுவிலும் தெளிய சிந்தனை, தெளிந்த விரிவுரை, கற்பாறையைப் பிளந்து கவின் முத்தைக் காட்டும் உன் பேராற்றல், இவை இனி இல்லைத்தான்.

அன்பு நிறை ஆசானே, அருமைப் புலவனே, நீ மறைந்துவிட்டாய். கவிதை படிக்கலாம். அதனை இலக்கணம் அறிந்துணர்ந்து படிக்கலாம், அது இலகுவும் கூட, அழகும் எழிலும் கூட என்பதை உலகறியச் செய்த உத்தமனே, நீ மறைந்துவிட்டாய்,

சிறு குடில் போதும். செல்வம் அதுவல்ல, எம் இயல்பே தான். அதுவும் தமிழேதான் என்பதை எடுத்தியம்பி வாழ்ந்த ஏந்தலே நீ மறைந்துவிட்டாய்.

உறுநோய் வந்திடினும் உடலுக்கு அப்பால் சிந்தனையாற் சிறகடித்து உயரலாம். சொந்தத் துயர் மறந்த சேவையால் வாழலாம். என்பதைச் செந்தமிழ்த்தொண்டால் விளக்கிய தீஞ்சுடரே நீ அணைந்து விட்டாய். நின் ஆத்மா உயர்ந்துயர்ந்து சென்றிருக்கும். அதற்கு ஐயனே, எம், அஞ்சலியைச் செலுத்துகிறேம். வணங்குகிறேம்.

க. பத்மநாதன்
புங்குடுதீவு.

# சிறுவர் விளையாட்டுப்போட்டி

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சிறுவர் விளையாட்டுப் போட்டி, கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட்டார வித்தியாதரிசி திரு கே. கனகசபாபதி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

# பேர்னுண்டோ அறிக்கையை அமுல்செய்யாவிடில் வேலை நிறுத்தம்!

## அஞ்சல்சேவையாளர் சங்கத்துக்கு வரவிருக்கும் தீர்மானம்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கொழும்பிலுள்ள புதிய நகரசபை மண்டபத்தில் இம்மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. பூரண உறுப்பினர் மகாநாடு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இச்சங்கத்தில் புதிதாகச் சேர்ந்த அங்கத்தவர்களின் தொகை 115 என்றும் விலகியவர்கள் எண்ணிக்கை 93 எனவும் மொத்த அங்கத்தவர்கள் தொகை 3092 என்றும் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தபாலகக் கட்டிடங்கள் உத்தியோகஸ்தர்களின் குடியிருப்பு வசதிகள் ஆகியவை பற்றியும் குடிநீர், குளிநீர் பிரச்னை பற்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக சங்கக் காரியதரிசி தனது அறிக்கையில் தெளிவு படுத்துயுள்ளார்.

பி ஏ. பெர்னுண்டோ கமிட்டி அறிக்கையை அரசாங்கம் அமுல் செய்யவேண்டும் என்றும் அப்படி செய்யாத பட்சத்தில் அதனைப் பெறுவதற்காக வேலைநிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் ஆண்டு மகாநாட்டில் பரிசிலனைக்கு வரவிருக்கின்றது.

தற்பொழுது உணவு அருந்துவதற்கு கொடுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள் போதாதென்றும் அதனை 45 நிமிடங்களாக கூட்டவேண்டும் என்று மற்ளேர் தீர்மானம் அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

பத்தொன்பதாவது ஆண்டு அறிக்கையும் கணக்கு விபரங்களும் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கல்வித் தரம்உயர

# சுயேச்சையான பாடசாலைகள் இயங்குவது அவசியம்

## வடமாகாண அதிபர் சங்க பொதுக் கூட்டத்தில் தலைமையுரை

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கையில் உயர்ந்த கல்வித் தரத்தை நிலைநாட்ட வேண்டுமெனில், எவ்வித தலையீடுமில்லாத சுயேச்சையான தனியார் பாடசாலைகள் இயங்க வேண்டியது மிகவும் அவசியம்" என்று வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் சங்கத் தலைவரும் ஹாட்லிக் கல்லூரி அதிபருமான திரு. கே. பூரணம்பிள்ளை குறிப்பிட்டார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் திரு. பூரணம்பிள்ளை பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி என்ற அணுவுக்கு மாணவனே கருவாவான். ஆனல் இன்று இலங்கையிலே அந்த கருப்பொருளான மாணவன் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளான். மாணவரின் அபிவிருத்தியை, முன்னேற்றத்தை கருத்தில் கொள்வது குறைந்து வருகிறது. ஒரு வருடத்தில் உள்ள 365 நாட்களில் 180 நாட்களிலும் 81 நாட்கள் ஒரு ஆசிரியர் லீவு எடுக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. தங்கள் வேலையுடன் மற்றும் லீவு எடுக்கும் ஆசிரியர்களின் வேலையையும் ஆசிரியர்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே மாணவனை கல்வியின் கருவாகக் கொள்ள வேண்டும் எனவும், அதற்கேற்ற வகையில் பாடசாலை நிர்வாக முறைகளை மாற்றி அமைக்க அதிகாரிகளைநாம் கேட்கவேண்டும். லீவு எடுக்கும் ஆசிரியர்களின் இடத்துக்கு கடமையாற்றவென உதவிச் சேவை ஆசிரியர்களை நியமிப்பது, நீண்டநாள் லீவில் செல்லும் ஆசிரியருக்காக வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட இன்னெரு ஆசிரியரை கடமைபுரிய அழைப்பது போன்ற வழிகள் திருப்திகரமானவையல்ல, பாடசாலை வேலைகளை எவ்விதம் பாதிக்கும் என்பதை கருத்தில் கொள்ளாதருக்கு புள்ளி அடிப்படையிலான இம்மாற்றத் திட்டமும் மாணவர்களை கல்வியின் விளிம்புக்கே தள்ளி விடுகிறது. இது போன்றவைக்கு மாற்றுமருந்து காணப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். பாடசாலையின் உள்விவகாரங்களில் அதிபர்களுக்கு குறிப்பிடக்கூடியளவு அதிகாரமிருந்தால்தான் பாடசாலைகள் செவ்வனே இயங்கமுடியும். ஆனல் கல்வி இலாகா அதிபர்களுக்கு உரிய அதிகாரங்களை அளிக்காதிருப்பது துரதிஷ்டமே, ஒரு கல்லூரிக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போதும், ஆசிரியர்களை அக்கல்லூரியிலிருந்தோ, கல்லூரிக்கோ இடமாற்றம் செய்யப்படும் பொழுதும் கல்லூரி அதிபர் கலந்தாலோசிப்பது அவசியம், பொதுக் காரியதரிசி திரு. கி. கே. கந்தசாமி தனது அறிக்கையை சமர்ப்பித்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவின்போது வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச அம்பிகைபாகன் தலைவராகவும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு. செல்லத்துரை காரியதரிசியாகவும், தனதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் எட்டும் பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# நூல்நிலையத் திறப்புவிழா

சாவகச்சேரி, செவ்

தச்சன்தோப்பு ஸ்ரீ விக்னேஸ்வரா நூல்நிலையத் திறப்புவிழாவை முன்னிட்டு 5 மைல் ஓட்டப் போட்டியும் 10 மைல் சயிக்கிள் ஓட்டப்போட்டியும் நடைபெறும்.

# தமிழ் அறிஞர்களுக்கு உபசாரம்

உடுப்பிட்டி, செவ்வாய்

தென்னிந்திய தமிழ் அறிஞர்களான திரு. ஔவை துரை நடராசனுக்கும் திருமதி தாரா நடராசனுக்கும் கருணையம்பதி இளைஞர்முன்னேற்றக் கழகத்தினர் இரவுவிருந்தளித்துக் கௌரவித்தனர். திரு ஔவை துரை நடராசனும் திருமதி தாரா நடராசனும் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரைப் பாராட்டியதுடன் ஆண்டுதோறும் செந்தமிழுக்குப் பெருமை தேடித்தந்த வள்ளுவனுக்கு விழா எடுத்து மகிழ வேண்டும என்றும் கூறி வாழ்த்தினர்.

செயலாளர் திரு: தி. வ. சிவஞானம் நன்றி கூறுகையில் "கடல் கொண்ட தமிழ் இலங்கையைக் கடல்கடந்த வந்து கருணையம்பதியிலே தமிழ்மழை பொழிந்த திரு. நடராசனை நமது கழகம் என்றும் மறக்கமுடியாது என்றுர்.

—

# வாசிகசாலைகள் பற்றி எம்: பி;

சாவகச்சேரி, திங்கள்

"வாசிகசாலைகளைக் கிராமங்களிலே நிறுவி அறிவுவளர்ச்சியை ஏற்படுத்தி அதன்மூலம் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கப் பெரியவர்களும் இளைஞர்களும் முன்னேறவேண்டும்." என்று சாவகச்சேரி எம். பி, திரு. வி. என். நவரத்தினம் தச்சன்தோப்பு ஸ்ரீ முருகன் வாசிகசாலை 18வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வாசிகசாலைகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தினர், நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்கள்.

—

# "தற்பொழுது தரகர் வேண்டும்"

மிரிகம, செவ்வாய்

'தற்பொழுது சாதாரண மனிதன் தனது பிரதிநிதியை சந்திக்கும்பொழுது ஒரு தரகர் மூலமே சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருக்கும்பொழுது மக்களுக்குள்ளேயுள்ள பிரிவினைகளை அகற்ற முயற்சி செய்தது' என்று செனட்டர் திரு. ஜே. பி ஓபயசேகரா மீரிகம தொகுதியில் பேசும்போழுது குறிப்பிட்டார்.

# மணவாளக்கோல திருவிழா

சண்டிருப்பாய், செவ்

பழம்பெருமைவாய்ந்த, சின்னத்தம்பிப் புலவரால் அந்தாதி பாடப்பட்ட சண்டிருப்பாய் கல்வளை பிள்ளையார்கோவில் மணவாளக்கோல திருவிழா எதிர்வரும் (27-6-65) ஞாயிற்றுக்கிழமைநடைபெறும். அன்று பகல் விநாயகப்பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். இரவு சுவாமி அலங்கரிக்கப்பட்டு சப்பரத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

மேளக்கச்சேரி, நடனக் கச்சேரி போன்ற கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

—

# 25 மாணவருக்கு ஒரு ஆசிரியர்

கொழும்பு, செவ்

அரசாங்க பாடசாலையில் கல்விபயிலும் ஒவ்வொரு 25 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் வீதம் இருக்கிருர்களென்று கல்வி இலாகாவால் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்மூலம் அறியப்படுகிறது.

சிங்களம் மூலம் விஞ்ஞானம் போதிக்க போதியளவு ஆசிரியர்கள் இல்லையென்றும் தமிழ் பாடசாலைகளில் இந்நிலைமை இல்லையென்றும் மேலும் அந்த மதிப்பீட்டின் மூலம் அறியப்படுகிறது.

—

# சர்வதேசப் புகைப்படக்கண்காட்சி

ஹாம்பார்க் (டாட்) ஜூன் 22

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹாம்பார்க் நகரில் சமீபத்தில் சர்வதேசப் புகைப்படக் கண்காட்சி நடந்தது. இந்தியாஉட்பட ஏராளமானநாடுகள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டன. உலக முழுவதிலும் கேமரா நிபுணர்கள் எடுத்த மிகச்சிறந்த 4252 புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன, பலவிதமான தந்திரங்களைக் கையாண்டு நுட்பமான முறையில் எடுக்கப்பட்டிருந்த புகைப்படங்களும், ஏராளமான கலர்ப்படங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. நகைச்சுவையான பலபடங்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன, இந்தியாவின் மூன்று புகைப்படங்கள் வெகுவாகப் பாராட்டப் பட்டன.


REGAL - JAFFNA
NOW SHOWING

Ray Danton
Jayne Mansfield
in
THE GEORGE
RAFT STORY



மூக்கடைப்பா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!

அருத எண்ணெய்

அருபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541, 7068)



கடைசி 3 தினங்களுக்கு மட்டும்
கிங்ஸ்லி
(கொழும்பு)
தினசரி 3-00, 6-00, 9-30

★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-00, 9-30
டவரையோ
(சிங்களம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

**சுத்தமான நல்லெண்ணெய்**
**மா. மு. இளையதம்பிச்செட்டியார்**
**18, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை.**

கறுவாக்காடு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளை, நுகெகொடை, கொம்பனித்தெரு, கொட்டாஞ்சேனை, உணுப்பிட்டி ஆகிய இடங்களில் பிரபல நல்லெண்ணெய் வியாபாரியாக இருந்த மா. மு. இளையதம்பிச்செட்டியார் காலமாகிவிட்டபடியால் அவருடைய வியாபாரத்தை மேற்குறிப்பிட்ட இடங்களில் நாங்கள் மூடிவிட்டோம். தற்பொழுது எங்கள் வாடிக்கைக்காரருக்காக 18, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையில் அவரின் மனைவியாகிய இ. பெண். பொன்னம்மா ஆகிய நான் திறம்பட நடத்திவருகிறேன். உடலுக்கும், மூளைக்கும், கண்ணுக்கும் குளிர்ச்சியூட்டத்தக்கதாக இளநீர் விட்டு பாகம் செய்யப்பட்ட சுத்தமான நல்லெண்ணெயை குறிப்பிட்ட விலாசத்தில் எமது வாடிக்கைக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாம். 434

இ. பொன்னம்மா.


## ஹாக்கிப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இடைவேளையின்போது இரு பகுதியினரும் கோல் எதுவும் போடவில்லை. இடைவேளைக்குப் பின்னர் யாழ் மத்திய கல்லூரி இரண்டு கோல்களைப் போட்டது. காந்தன் சாந்திகுமார், நல்லநாதன் நன்கு விளையாடினார்கள். சென் ஜோன்ஸ் சார்பில் சாந்தாராம், பாலசுப்பிரமணியம், விபுலானந்தர் ஆகியோர் நன்கு விளையாடினார்கள். மத்தியஸ்தர்கள்: கே. பூபாலசிங்கம், ஜே. ஸ். துரைசிங்கம்.

## நாய்களின் வேட்டை

சுழிபுரம், செவ்,

கட்டாக்காலி நாய்களின் தொல்லை இங்கு தினமும் அதிகரித்துள்ளது. போக்குவரத்து மக்களுக்குத் தொல்லைகொடுப்பது மட்டுமல்லாது வீட்டில் வளர்க்கும் ஆடுகளுக்கும், கோழிகளுக்கும் நாசம்விளைவிக்கின்றன. இப்பகுதியில் உள்ள வீடொன்றில் உயிருடன் நின்ற ஆட்டை 8 நாய்கள் ஒன்றுகச்சேர்ந்து கொன்றுதின்ற சம்பவம் சென்றவாரம் நடைபெற்றது. வீட்டிலிருந்த அனைவரும் ஆலயத்துக்குச் சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றது. வீட்டுக்காரர்கள் திரும்பி வந்து பார்த்தபோது ஆட்டின் எலும்புகளே காணப்பட்டனவாம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

**புதன் 23-6-65**

**கொழும்பு**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-30 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 6-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 6-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 78-0 உங்கள் பிரச்னை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 திரைஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

மகஜன கல்லூரி

# விளையாட்டுப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, செவ்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டி வர்த்தக அமைச்சின் உதவிக்காரியதரிசி திரு. ரி. தர்மராஜா தலைமையில நடைபெற்றபோது சின்னப்பா இல்லம் 197 புள்ளிகளைப்பெற்று சாம்பியன்கோஷ்டியாகத் தெரிவுசெய்யப்பட்டது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில நடந்த இப்போட்டியில் அருணம்பலம் இல்லம் 105 புள்ளிகளையும் சின்னையா இல்லம் 185 புள்ளிகளையும் துரையப்பா இல்லம் 112 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. இப் போட்டிகளில் குண்டெறிதலில் புதிய சாதனையை நிலைநாட்டிய தர்மசந்திரனுக்கும் பரிதிவட்டம் வீசுவதல் புதிய சாதனையை நிலைநாட்டியதற்காக எஸ். சிறீஸ்கந்தராஜாவுக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள வழங்கப்பட்டன. திருமதி ரி. தர்மராஜா வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

மத்தியபிரிவு (ஆண்)- எஸ் சோமஸ்கந்தராசா, (பெண்)- கே. தவநாயகி, மேற்பிரிவு (ஆண்)- கே சந்திரசேகரம், (பெண்) வி இந்திராணி. உயர்மேற்பிரிவு (ஆண்)- ஆர் தவராசா.

நான்கு இல்லங்களுக்கிடையிலும் நடைபெற்ற போட்டிகள சிலவற்றின் முடிவுகள்:-

100 யார் ஓட்டம் மத்திய பிரிவு- வி நாகரத்தினம், ஜே ஜெயகுமாரன், வி ஜெயகாந்தன். மேற்பிரிவு- வி சந்திரசேகரம், ஜி சிவகுருநாதன், ரி ஈஸ்வரகுமார். உயர்மேற்பிரிவு- ஆர் தவராசா, ரீ மகாலிங்கம், கே சத்தியானந்தன், (பெண்கள்) மத்தியபிரிவு- கே தவநாயகி, வி ராஜேஸ்வரி, கே செல்வராணி. மேற்பிரிவு- எஸ் அநுசியா, பி இந்திராணி, கே மகாலெட்சுமி.

200 யார் ஓட்டம்- ஆண்கள் மத்தியபிரிவு- வி நாகரத்தினம், ரி சிவராஜமூர்த்தி, எம் ராஜாராம். மேற்பிரிவு- வி சந்திரசேகரம், வி ஜெயந்திரன் எஸ் கிரிதரன்.

கயிறு அடித்தல் (75 யார் பெண்கள்) மத்தியபிரிவு கே. தவநாயகி, கே. செல்வராணி, வி. ஜெயராஜலெட்சுமி. மேற்பிரிவு பி. இந்திராணி, எஸ். அநுசியா, ரி. ஆனந்தசௌந்தரி.

பரிதிவட்டம் வீசுதல் (ஆண்கள்) மத்திய பிரிவு: எஸ். சிறிஸ்கந்தராஜா, வி. விக்னேஸ்வரன், ரி. கமலநாதன், மேற்பிரிவு ஏ. லோகநாதன், ரி. தர்மசந்திரன், எஸ். அருள்குமார், மத்திய பிரிவு (பெண்கள்) வி. ராஜலட்சுமி, கே. தேவநாயகி, கே. கனகாம்பிகை, மேற்பிரிவு (பெண்கள்) கே. தேவகுஞ்சரி, கே. விஜயலட்சுமி, எஸ். பரஞ்சோதி.

உயரப்பாய்தல் (ஆண்கள்) மத்தியபிரிவு ரி. சிவநேசன், எஸ். மகேந்திரன், எஸ். தில்லைநடேசன். மேற்பிரிவு: வி இளம்சென்னி, எஸ். யோகேந்திரன், ரி. சததேஸ்வரன.

நீளப்பாய்தல் (ஆண்கள்) மத்தியபிரிவு: வி. நவரத்தினம், எஸ். கிரிதரன், எஸ். கெங்காதரன். மேற்பிரிவு: பி. சகுணேந்திரன், கே. சிவஞானம், பி. சிவபாதேஸ்வரம். உயர்மேற்பிரிவு: ஆர். தவராஜா, கே. விநாயகமூர்த்தி, கே. சத்தியநாதன்.

1500 யார் ஓட்டம் (ஆண்கள்) மேற்பிரிவு: எம் நவரத்தினம், கே அருணாசலம், பி ஜெயநாதன்.

800 யார் ஓட்டம் (ஆண்கள்) மேற்பிரிவு: எம் நவரத்தினம், வி விஜயராஜா, கே அருணாசலம். உயர்மேற்பிரிவு: கே சத்தியநாதன், கே குமாரலிங்கம், ரி மகாலிங்கம்.

100 யார் தடை தாண்டிப் பாய்தல் (ஆண்கள்) மத்திய பிரிவு: எஸ் சந்திரலிங்கம், வி மகேந்திரன், கே கனகேஸ்வரன், மேற்பிரிவு: ஏ யோகநாதன், வி ஜெயநாதன், ரி. சத்தீஸ்வரன்.

ஈட்டி எறிதல் மேற்பிரிவு: ஏ யோகநாதன், வி ஜெயநாதன், ரி சத்தீஸ்வரன்.

கெந்தி அடி வைத்துப் பாய்தல மேற்பிரிவு: பி சகுணேந்திரன், வி விஜயராஜா, பி சிவபாதேஸ்வரம்.

தடி ஊன்றிப் பாய்சல் மத்தியபிரிவு: எஸ் சிறிஸ்கந்தராஜா, எஸ் கிரிதரன், ரி சிவஞானலிங்கம், மேற்பிரிவு: பி சகுணேந்திரன், வி இளம்சென்னி, கே தெய்வேந்திரம்.

150 யார் ஓட்டம் (பெண்கள்) மத்தியபிரிவு: கே. தேவநாயகி, கே செல்வராணி, வி ராஜேஸ்வரி.

4 X 400 யார் அஞ்சலோட்டம் (ஆண்கள்) மேற்பிரிவு: சின்னையா இல்லம், சின்னப்பா இல்லம், அருணம்பலம் இல்லம்.

400 யார் ஓட்டம் (ஆண்கள்) மத்தியபிரிவு வி. நாகரத்தினம், எஸ். சந்திரலிங்கம், ரி சிவராஜமூர்த்தி, மேற்பிரிவு: கே. சந்திரசேகரம், வி. விஜயராஜா, எம் ராஜாராம்.

100 யார் தடை தாண்டிப் பாய்தல்: (ஆண்கள்) மேற்பிரிவு: வி இளம்சென்னி, கே அருணாசலம், பி சிவபாதேஸ்வரன்.

4×100 யார் அஞ்சல் ஓட்டம்: (ஆண்கள்) மத்திய பிரிவு: சின்னப்பா இல்லம், துரையப்பா இல்லம், சின்னையா இல்லம்.

மேற்பிரிவு: சின்னப்பா இல்லம், அருணம்பலம் இல்லம், சின்னையா இல்லம்.

(பெண்கள்) மத்தியபிரிவு: சின்னையா, சின்னப்பா, அருணம்பலம். மேற்பிரிவு: அருணம்பலம், துரையப்பா, சின்னையா.

விநோத உடைப்போட்டி: (ஆண்கள்) எம் முருகதாசன், ஆர் பாலசுப்பிரமணியம், எம் சந்திரதாசன், (பெண்கள்) கே சித்திரலேகா, எஸ் அங்கயற்கண்ணி, எஸ் ரஞ்சினி.

## ஐக்கிய விளையாட்டு கழகம் வெற்றி

காங்கேசன்துறை, செவ்

காங்கேசன்துறை பட்டின சபையின் சுகாதார விழாவை யொட்டி வருடாவருடம் நடைபெறும் விளையாட்டுப் போட்டியில், அண்மையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரும், தையிட்டி 'ஸ்டார்' விளையாட்டுக்கழகத்தினரும் கலந்து கொண்டனர்.

போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் ஐக்கியகழகத்தின் 3 கோல்களையும் தையிட்டி விளையாட்டுக் கழகத்தினர் ஒரு கோலையும் போட்டனர். இடை வேளையின் பின்னர் ஐக்கிய விளையாட்டு கழகத்தினர் மிகவும் திறமையாக விளையாடி மேலும் 3 கோல்களைப் போட்டு கோல் எண்ணிக்கையை ஆறாக உயர்த்தினர்.

இப் போட்டிக்கு திரு க. பரஞ்சோதி மத்தியஸ்தம் வகித்தார். இப்போட்டியின் இறுதி ஆட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெறும்.


## வரி விளம்பரம்

### கல்வி

ஜி. சி. இ. உயர்தரம் கலை / விஞ்ஞானம், ஜி. சி. இ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜி. சி. இ. முதல் வருடம் விஞ்ஞானம்; ஜே. எஸ். சி., ஆங்கிலம் / தமிழ் தட்டியல், சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம்; சிங்களம் ஆகிய வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 549

பயிற்றப்பட்ட உபாத்தியாயர்கள் இலங்கைப் பல்கலைக்கழக பட்டபரீட்சைக்கு வெளிப் பரீட்சார்த்திகளாகத் தோற்றலாம். ஜி. ஏ. கியூ. வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆடி 1-ம் திகதி பி. ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதம் செய்யாமல் உடனே சேருங்கள். யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 550

ஆடிமாதத்தில் எங்கள் ஜி. சி. இ. சாதாரணம், வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும், விபரங்களுக்கு எழுதவும். யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை, வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 551

மிகவும் நல்ல செய்தி. நல்ல அநுபவமுள்ள பட்டதாரிகளால் காலை / மாலை ஜி.சி.இ. உயர்தரம் / சாதாரணம், வகுப்புகளுக்கு தூய / பிரயோகம் / உயர்தர கணிதம், இரசாயனம், பௌதீகம், உயிரியல், தாவரவியல், விலங்கியல், ஆங்கிலம் ஆகியபாடங்கள் விசேஷமாகக் கற்பிக்கப்படுகின்றது. உடன்சேருபவர்களுக்கு சித்தி உத்தரவாதம், யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 552

லண்டன் சேம்பர் ஒவ் கொமேர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஒவ் புக்கீப்பர்ஸ், மத்திய எழுதுவினைஞர், போஸ்ட்மாஸ்டர் அன் சிக்னல்லர்ஸ், குரு வித்தியாலய பிரவேசம், அப்போதிக்கரி புகுமுகம், தாதிமார் பரீட்சை வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 553

### வைத்தியம்

சயரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, நீடு இரைத்தல், புத்திரக்பேறு, தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 890

### விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு அரசாங்க குடியேற்றத்திட்டமாகியகொலனிக்குத் தெற்குப்பக்கத்திலும் வயிரவ கோவிலுக்கு வடக்கும் பக்கத்திலும் 3 அறைகள் கொண்ட 2 பரப்பும், அதன் அருகில் 8 பரப்பும் காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பியின் காணி விற்பனைக்கு உண்டு. வீடும், 2 பரப்பையும் தனித்தும், 8 பரப்பை இரண்டாகப் பிரித்தும் அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில்காணவும், விற்பனையாளர் கே. கே. அம்புரோஸ், நம்பர் 16, மடம்வீதி, யாழ்ப்பாணம். 555

### தேவை

புடவை வியாபாரத்தில் அநுபவமுள்ள விற்பனையாளர், தையல்வேலையில் அநுபவமுள்ள பெண் [illegible] தேவை. விபரத்திற்கு உடனடியாக வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியதரிசியோடு தொடர்பு கொள்ளவும், விண்ணப்பப்பத்திரத்தின் கடைசித் திகதி 30-6-65, விண்ணப்பதாரர் வலிகாமத்திலுள்ளவர்களாக இருக்க வேண்டும். 546

மட்டக்களப்பில் மிகச்சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு கொழும்பு, கண்டி, பதுளை போன்ற பிரதான நகரங்களில் ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் "பேர்ள் பிரண்ட் கைக்குத்து அரிசி மாவு" யாழ்நகரில் கடைகளுக்கும் வீடுகளுக்கும் விநியோகஞ் செய்வதற்கு, சொந்த துவிச்சக்கரமுடைய ஆட்கள் தேவை. நல்ல முயற்சியுடையவர் மாதமொன்றிற்கு 175/- ரூபாவிற்குமேல் வருமானம்பெறலாம். 29-6-65 க்கு முன்பதாய் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். —மனேஜர், ஈஸ்ற் சிலோன் இண்டஸ்ரீஸ், பவுண்டரி ரோட், செங்கலடி.

### திருமண அழைப்பு

**குமாரசாமி — பரமேஸ்வரி**

நிகழும் விசுவாவசு வருஷம் ஆனி மாதம் 10-ம் திகதி (24-6-65) வியாழக்கிழமை இரவு 8-01 மணி முதல் 9-50 மணிவரை வரும் சுபயோக சுபமுகூர்த்தத்தில் சண்டிலிப்பாய் க. மாணிக்கம் அவர்களின் புத்திரன் திருநிறைச்செல்வன் குமாரசாமி ஆகிய எனக்கும் சண்டிலிப்பாய் க. தவசி அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி பரமேஸ்வரி அவர்களுக்கும் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் இனபந்துக்களுடனும் நண்பர்களுடனும் சமுகந்தந்து சந்தோஷித்து எம்மை மகிழ்வித்து ஏகுமாறு வேண்டுகிறேம்.

அன்புள்ள
மா. குமாரசாமி.
சைவ ஆங்கிலபாடசாலை
ஒழுங்கை,
சண்டிலிப்பாய்.
557


# இளையதம்பி இல்லம் முதலிடம் பெற்றது

குரும்பசிட்டி, செவ்

"விளையாட்டுப்போட்டிகள் இளம் வயதினர் மத்தியில் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ள உதவுவதோடு மன உறுதியும் ஏற்படுத்துகின்றன. வெற்றி தோல்விகளை பொருட்படுத்தாது மாணவர்கள் சகிப்புத் தன்மையை ஏற்கும் பழக்கம் நிலவுவதால் எதிர்கால வாழ்க்கையை மாணவர்கள் சிறந்த முறையில் அமைக்க முடியும்". இவ்வாறு மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் திரு. ஜி. எம். பி. அத்துருபாரு அன்றுவல் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். பரிசளிப்புவிழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. வ. சுப்பிரமணியம் தலைமை தாங்கினர்.

சனிக்கிழமை நடைபெற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய ஆபிரிக்க மகாநாடு

# 13 பிரதமர்கள் எதிர்ப்பு!

லண்டன், ஜூன் 21

அல்ஜீயர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டை ஒத்திவைக்கும்படி கேட்பதென, இங்கு காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் 13 ஆசிய ஆபிரிக்க பிரதமமந்திரிகள் முடிவுசெய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதைத் தெரிவிக்கும் பொருட்டு தூதர் ஒருவரை அல்ஜியர்ஸுக்கு அனுப்பவும் அவர்கள் முடிவுசெய்திருக்கிறார்கள்.

ஆனால் திட்டமிட்டப்படி வருகிற 29-ம் திகதி மகாநாடு நடைபெறும் என அல்ஜீரிய புரட்சி அரசாங்கம் உறுதியுடன் அறிவித்துள்ளது. வருகிற வியாழக்கிழமை ஆசிய-ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாடு நடைபெறும் என அல்ஜீரிய வெளிநாட்டு மந்திரி கூறினார். சீனா, ஐக்கிய அராபியக் குடியரசு, சிரியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளித்திருப்பதாயும் அவர் கூறினார்.

புதிய அல்ஜீரிய அரசாங்கத்தை பிரிட்டன் அங்கீகரித்திருக்கிறது. இதர மேற்கு நாடுகளுடன் ஆலோசனை கலந்தபின் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டை ஒத்திவைக்க வேண்டும் என ஜப்பான் யோசனை தெரிவித்திருக்கிறது- அல்ஜீரியாவில் நிலவும் அசாதாரண அரசியல் நிலைதான் இதற்குக் காரணம் என்றும், மகாநாட்டுக்குச் செல்லவிருந்த ஜப்பானிய தூது கோஷ்டியின் பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

எதியோப்பியா மகாநாட்டில் கலந்துகொள்ளும் என அறிவிக்கப்படுகிறது.

அழைப்பு அனுப்பப்பட்டால் தாம் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருப்பதாய் மலேஷியா அறிவித்தது.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி பென்பெல்லாவின் ஆதரவாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு

சியோல், ஜூன் 21

ஜப்பானுக்கும் தென்கொரியாவுக்குமிடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுவதை எதிர்த்து மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர் இவர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்செய்தனர் ஒப்பந்தம் நாளை கைச்சாத்திடப்படுமெனத் தெரிய வருகிறது.

## இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

நல்ல நிர்வாகம் என்ற சாக்கில் இ. போ. ச. வில் நடைபெறவிருக்கும் எந்தவித இடமாற்ற நடவடிக்கையையும் தமது சங்கம் வன்மையாக எதிர்க்குமென அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர்சங்க பொதுக் காரியதரிசி திரு. டி. ஜீ. வில்லியம் தெரிவித்துள்ளார்.

## "கடமைகளைச் செய்யவும்"

பொல்காவலை, செவ்.

"அரசாங்க உத்தியோகத்தர்கள் கைப்பொம்மைகளாக இருக்கக்கூடாது. அவர்கள் தங்கள் கடமைகளை, பிறரைத் திருப்திப்படுத்தும் முறையில் செய்யக்கூடாது. நாட்டின் வளர்ச்சிக்காகவும் உயர்வுக்காகவுமே நாம் நமது வேலைகளைச் செய்கின்றோமென்று கருத வேண்டும்" என்று உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா அரசாங்க உத்தியோகத்தர்களால் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

2-வது

# சதி வழக்கு விசாரணை ஜூலை 13 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

இரண்டாவது புரட்சிச் சதி வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி தரப்பினரால் கிளம்பப்பட்ட ஆட்சேபனையை வழக்கை விசாரணை செய்த மூன்று நீதியரசர்களும் நிராகரித்தனர்.

கேர்னல் டெரி அமரசிங்கா, லெப்டினண்ட் கேணல் ஹியூ டி' அல்விஸ் ஆகிய இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நீதியரசர் ஜி. பி. ஏ. டி' சில்வா, நீதியரசர் மாணிக்கவாசகர், நீதியரசர் அலஸ் ஆகியோர் வழக்கை விசாரணை செய்தனர்.

எதிரிகளுக்கு அளிக்கப்பட்ட மன்னிப்பு, நிபந்தனைக்கு முரணாக அவர்கள் நடந்துகொண்டார்களா என்பதை முடிவுசெய்யவும் நீதிமன்றம் சட்டபூர்வமாக அமைந்துள்ளது என நீதியரசர்கள் கருத்து வெளியிட்டனர். அட்டோர்ணி ஜெனரலின் குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளியா சுற்றவாளியா எனப் பதிலளிக்க வேண்டுமென எதிரிகளுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஜூலை 13-ம் திகதி வரை ஒத்திவைத்தனர்.

எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்சிட்டிஅட்டோர்ணி ஜெனரல் எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்த முறை தவறானது என எடுத்துக் கூறியபோது நீதியரசர்கள் அது சட்டப்படி சரியாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்கள்.

## அமரசிங்கா அல்ஜியர்ஸ் புறப்பாடு

கொழும்பு, திங்கள்

அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் பங்கெடுத்துக்கொள்வதென இலங்கை தீர்மானித்திருக்கிறது. சென்ற வாரம் இங்கு வந்த இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு ஷேர்லி அமரசிங்கா மகாநாட்டின் ஆயத்தக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் பொருட்டு இன்று அல்ஜியர்ஸ் புறப்பட்டார். லண்டனிலுள்ள செனட்டர் விஜயமனே அல்ஜியர்ஸ் வரும்வரை, அங்கு இலங்கைக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும்படி திரு அமரசிங்கா கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்

## வேலை வாய்ப்புகள்

புகையிரத நிலைய அதிபர்கள், உதவி அதிபர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதுபற்றி மேலும் விபரங்கள் இம் மாதம் 18-ந் திகதி வெளியாகியுள்ள அரசாங்க வர்த்தமானியில் பார்க்கலாம்.

ஆயுள்வேத கல்லூரியில் சித்த விரிவுரையாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையதுமாகும்.

மேலும்விபரங்கள் 18-ந்திகதி அரசாங்க வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

துறைமுக கமிஷனில் படம் வரைஞருக்கான பதவிகள், மற்றும் வேறு உயர்தர பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இ. போ. சவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், குடிசைக் கைத்தொழில் இலாகாவில் டிசைனர், தகவல் ஒலிபரப்பு இலாகாவில் நிகழ்ச்சி அதிகாரி ஆகிய பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவைபற்றியமேலதிகவிபரங்களுக்கு இம்மாதம் 18-ந் திகதி வெளியான வர்த்தமானியைப் பார்க்கவும்.

## தமிழில்தான்!

திருமலை, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும மாவட்ட இணைப்பு குழுக்கூட்டங்களிலும் மாவட்ட கமத்தொழில் கூட்டங்களிலும், தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்சபை உறுப்பினர்கள் இனிமேல் தமிழ் மொழியிலேயே தங்கள் பேச்சுக்களையும் கடிதத்தொடர்புகளையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று, திருகோணமலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா யாழ்ப்பாணம் மாவட்டங்களில்அரசாங்க அதிபர்களை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் இணைப்புக் குழுக் கூட்டங்களில் தமிழில் பேசுவதற்கும் கூட்ட நிகழ்ச்சிகளை தமிழில் அனுப்புவதற்கும் ஒழுங்குசெய்யும்படி கேட்டுள்ளார்.

## கல்வி மந்திரி ஆலோசனை

கொழும்பு, திங்கள்

தனியார் பாடசாலைகள் மீது முந்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விலக்குவது பற்றி ஆலோசிக்கப்போவதாக கல்வி மந்திரி தெரிவித்துள்ளதாக தேசிய ஆசிரியர் சங்க தனியார் பாடசாலை பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

## மந்திரிக்கு எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

துணுக்காய்ப் பகுதிகாரியாதிகாரியை திடீரென மாற்றம் செய்தது குறித்து கிளிநொச்சி எம். பி. திரு கா. பொ. இரத்தினம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மந்திரி டாக்டர் தஹநாயக்காவுக்கு இதுபற்றி புகார் செய்த எம். பி. திரு கா. பொ. இரத்தினம்; உடனடியாக துணுக்காய்ப் பகுதிக்கு ஒரு காரியாதிகாரியை நியமிக்குமாறு கேட்டுள்ளார். காரியாதிகாரி இல்லாததால் சகாய வேலைகளிலும், நிவாரணம் வழங்குவதிலும தாமதம் ஏற்படுகிறதென்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காரியாதிகாரியை நியமிப்பதில் மந்திரி உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

## சோவியத் தூதுகோஷ்டி

கொழும்பு, செவ்வாய்

சோவியத் வெளிநாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு தூது கோஷ்டி, உதவி வெளிநாட்டு மந்திரி திரு வி. பெர்யூபின் தலைமையில நேற்று இலங்கை வந்து சேர்ந்தது.

## எண்ணெய் கார்ப்பரேஷனில் ஆட்கள் அதிகம்

கொழும்பு, திங்கள்

எண்ணெய்க்கார்ப்பரேஷன் சம்பளமாக வழங்கும் பணத்தில் 80 சதவீதம் மேலதிக நேர வேலைக்காக வழங்கப்படுகிறது என்றும் கார்ப்பரேஷனில் தேவைக்கதிகமான ஆட்கள் வேலையிலமர்த்தப்பட்டுள்ளார்களென்றும் கார்ப்பரேஷன் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க உதவி மீண்டும் கிடைக்கும்

கொழும்பு, திங்கள்

ஐக்கிய அமெரிக்க அரசாங்க இலாகா உத்தியோகத்தர்களைக கொண்ட கோஷ்டி ஒன்று ஜூலை மாதம் முதல் வாரத்தில் இலங்கைககு விஜயம்செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு மீண்டும் அமெரிக்க உதவி அளிப்பதுபற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இக் கோஷ்டி இலங்கை வருவதாக அறியப்படுகிறது.

## சிலுவைகள் அகற்றப்பட்டன

கொழும்பு, திங்கள்

கனத்தை பொதுமயானத்தின் பிரதம வாசல்கதவில் இருந்த சிலுவைகள் இரண்டும் அகற்றப்பட்டன. இவற்றுக்குப் பதிலாக கொழும்பு மாநகர சபையின் அடையாளச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த சிலுவைகளை மயானக் கதவிலிருந்து அகற்றவேண்டுமென பௌத்த காங்கிரஸ் சில காலங்களுக்குமுன் கேட்டிருந்தது.

## இளையதம்பி . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போட்டியில் இளையதம்பி இல்லம் 140 புள்ளிகளைப் பெற்று முதலிடமாகத் தெரிவு செய்யப்பட்டதால் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது. நாககாதர் இல்லம், மாணிக்கம் இல்லம், கந்தையா இல்லம், சுப்பிரமணியம் இல்லம் முறையே 129, 119, 118, 64 புள்ளிகளைப் பெற்று இரண்டாம், மூன்றும், நாலாம், ஐந்தாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. இவ்வருடம் நான்கு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. மேற்பிரிவு வீரர் கே. நவரத்தினராஜா 38' 8" பாய்ந்து கெந்தி அடி வைத்துப் பாய்தலிலும் கதிரவேலு 14' 9 1/2" பாய்ந்து நீளப்பாய்தலில் கீழ்ப்பிரிவு சாதனைகளை நிலைநிறுத்திக் கொண்டனர். மத்தியபிரிவு வீரர்கள் கே. கணபதி, எஸ். பிரேமச்சந்திரன் ஆகியோர் முறையே நீளப்பாய்தலில் 17' 11 3/4" பாய்ந்தும் உயரப்பாய்தலில் 5' 2" பாய்ந்தும் புதிய சாதனைகளை வைத்துள்ளனர். கயிறு இழுத்தல் போட்டியில் இளையதம்பி இல்லம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

கீழ்ப்பிரிவு ஆண்கள்: பி. கதிரவேலு, பெண்கள் எம். லோகசாந்தினி.

மத்தியபிரிவு ஆண்கள்: கே. கணபதி, பெண்கள் சி. ஜெயதேவி.

மேற்பிரிவு ஆண்கள்: கே. சிறீபவன்; கே. வடிவேலு, பி. லைலநாதன், கே. நவரத்தினராஜா.

உயர் மேற்பிரிவு ஆண்கள்: கே குணராஜா, பெண்கள்: சி. யாமினி.

## கொடிகாமத்தில் சுகாதாரவார விழா

சாவகச்சேரி, செவ்.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் திரு. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் சுகாதாரவிழா நேற்றுமாலை நடைபெற்றது.

பிரதம பேச்சாளராக, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். தென்மராட்சி காரியாதிகாரி, டாக்டர் ஜோசெப், மற்றும் பலர் பேசினர். சுகாதார விழா பற்றி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.

## காரியாதிகாரிக்கு சேவைநலம் பாராட்டு

சழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரியாகவிருந்து பதவி உயர்வு பெற்று வாழ். பிரதேசத் தலைமைக் காரியாதிகாரியாக மாற்றம் பெற்றுச் செல்லும் திரு. டி. டபிள்யு செல்வரத்தினத்தின் சேவை நலம் பாராட்டுவிழா சங்கானை பொலிஸ் நிலைய முன்றலிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விழாவுக்கு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமை வகித்தார். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் காரியாதிகாரி கந்தோரில் இருந்து திரு. செல்வரத்தினம் பட்டினசபைத் தலைவர் க. அம்பலவாணர் ஆகிய இருவரையும் மங்கள வாத்தியம் முழங்க ஊர்வலமாக கூட்ட மைதானத்துக்கு அழைத்து வந்தனர். வழி எங்கும் பூரண கும்பங்கள் வைத்து மலர்மாலைகள் காரியாதிகாரிக்கு சூட்டப்பட்டன. சங்கானையூர் மக்கள் சார்பில் வாழ்த்துப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது.

திரு. மு. சிவானந்தம் பேசும்பொழுது, "காரியாதிகாரி திரு. செல்வரத்தினம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வலிமேற்கில் கடமையாற்றி மக்கள் மனதில் குன்றாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டார். அவரின் சாதுரியத்தினாலும் நிர்வாகத் திறமையினாலும் அவர் சகலரையும் சமமாக நடத்தி எல்லோரின் அபிமானத்தையும் பெற்றிருக்கின்றார்" என்று குறிப்பிட்டார்.

பட்டினசபைத் தலைவர் திரு. கா. செல்வராசன் பேசுகையில் திரு. செல்வரத்தினம் ஓர் நிர்வாகத் திறமைசாலி என்றும் அவரின் ஆலோசனையின்படி நடந்தால் இன்று வலிகாமம் மேற்கு சமாஜத்தினரால் மேற்கொள்ளப்பட்ட உப்பளத் திட்டம் தற்போதைய நிலைக்கு வந்திராதென்றும் திரு. செல்வரத்தினம் ஒரு சிறந்த ஆலோசகர் என்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கே. ஐயாத்துரை, எஸ். தெய்வேந்திரன் ஆகியோர் பேசிய பின்னர் திரு. டி. டபிள்யு செல்வரத்தினம் பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசினார், ஆசிரியர் திரு. ஏ. ந. இரத்தினசாமி நன்றியுரை வழங்கினார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு யூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org